# The Good Samaritan
## Luke 10:25-37

THEME: What must I do to inherit eternal life

Discussion - ஆராயப்பட வேண்டிய கேள்விகள்:

- **Describe the Verses Lk.10:26-28**
  a) What is written in the Law? (vs.26) - என்ன எழுதியிருக்கிறது? (Deut.6:5 , Lev.19:18)
  b) How do you read it? (vs.26) - நீ வாசித்திருக்கிறது என்ன?
  c) Do this...(vs.28) - அப்படியே செய்.

முதலாவது நாம் அறிய வேண்டியது, இயேசு கிறிஸ்து இந்த உவமையை ஏன் கூறினார்?

நியாயசாஸ்திரியினால் கேட்கப்பட்ட கேள்வியினூடாக இயேசு கிறிஸ்து இந்த உவமையை சொல்லவேண்டியதாயிற்று. இந்த நியாயசாஸ்திரி இயேசுவைப்பற்றி என்ன அறிந்திருக்கிறான் என்பதை vs.25ல் இருந்து காணக்கூடியதாக இருக்கின்றது. இயேசு கிறிஸ்து நித்திய ஜீவனை கொடுக்க வந்தார் என்று அறிந்திருக்கிறான். இவன் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க விருப்பினதால் இந்தக் கேள்வியை இயேசுவிடம் கேட்டதாக தெரியவில்லை. மாறாக, அவரை சோதிக்கும்படி (vs.25) அவரிடம் இந்தக் கேள்வியை கேட்டிருக்கிறான். இதற்காகத்தான் இயேசு கிறிஸ்து இந்த உவமையை கூறுகிறார்.

நியாயப்பிரமாணம் இருதயத்தில் மாத்திரம் எழுதி வைக்கப்பட்டு அதை கைக்கொள்ளமல் இருக்கும் போது எப்படி அது கிரியை செய்யும்? அதைக் கைக்கொள்ளும் போதுதானே கிரியையினால் அன்பு வெளிப்படும். <u>எழுதியிருக்கிறதை</u> நாம் <u>வாசித்து</u> (vs.26) தியானம் செய்யும் போதுதான் அது கிரியை செய்யும். அப்போதுதான் அன்பு வெளிப்படும்.

இந்த நியாயசாஸ்திரி <u>எழுதியிருக்கிறதை</u> <u>வாசித்து</u> அதை இயேசுவிடம் ஒப்புவித்து விட்டான். இவன் <u>எழுதியிருக்கிறதை</u> <u>வாசித்து</u> அதன்படி செய்தானா என்று பார்த்தால் அது இல்லை என்றுதான் கூற முடியும். இல்லாவிட்டால் இயேசு: அப்படியே செய், “அப்படியே செய் அப்போது பிழைப்பாய்” (vs.28,37) அதாவது, நீ சொன்னதன்படியே செய் என்று ஏன் இவனிடம் கூறவேண்டும். அதனால்தான் இயேசு நியாயசாஸ்திரிகளைக் குறித்து Lk.11:46- கூறுதைக்காணலாம். இவன் தனது வாழ்க்கையில், எழுதியிருக்கின்ற பிரமாணங்கள், கட்டளைகளை செயல்படுத்தினவனாக காணவில்லை.

அடுத்ததாக, (vs.29) இவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்க விருப்புகிறான். இதன் பொருட்டு எழுப்பப்படும் கேள்விதான், எனக்குப் பிறன் யார்? இதற்குப் பின்புதான் இயேசு உவமையை கையாள விரும்பி நியாயசாஸ்திரியிடம் இந்த உவமையாக பேசுகிறார்.

- இந்த நியாயசாஸ்திரி எப்படி தன்னை நீதிமான் என்று காண்பிக்க விரும்புகிறான்? **(vs.29)**
  a) யார் நீதிமான்? Ezekiel 18:9

இவன் நியாயப்பிரமாணத்தினால் தன்னை நீதிமானாக இயேசுவிடம் காண்பிக்க விரும்புகிறான். ஆனால், Ezekiel 18:9 கலாத்தியர் 3:24, 5:4, யோபு 9:20

- ஏன் லேவியனும், ஆசாரியனும் குற்றுயிராகக் கிடந்தவனை விட்டு பக்கமாய் விலகிப்போனார்கள்? **(vs.30-32)**
  Lev.21:1-3, Num.19:11-22

சரித்திரத்தின்படி பார்க்கும்போது, எருசலேமிலிருந்து எரிக்கோவுக்கு பிரயாணம் பண்ணும் தூரம் 17 மைல்களாகும். பாலைவனமும், கல்லுகள் நிறைந்ததுமான இடமாகும். கள்ளர்கள் தங்களுக்கு ஏற்றபடி தெரிந்தெடுத்து பிரயாணிகளை கொள்ளையிடுவதற்கு பயன்படுத்தும் இடமாகும். ஆசாரியன், லேவியனுடைய நிலை: இவர்கள் சமாரியர்களை தீட்டாக எண்ணுபவர்கள். ஒரு வேளை இவர்கள் நினைத்திருக்கலாம் காயப்பட்டவன் இறந்தவன் என்று. ஆனால், காயப்பட்டவன் யார் என்று வேதம் தெளிவாக கூறவில்லை. யூதனாக இருக்கலாம் என்று ஒரு சாரார் கூறுகின்றனார். இந்த ஆசாரியன், லேவியன் தங்கள் கலாச்சாரத்தினூடாக தங்களை தீட்டுப்படுத்தாமல் வாழ்ந்து வருபவர்கள். காயப்பட்டு குற்றுயிராகக் கிடப்பவனின் அருகில் இவர்கள் செல்லவில்லை. மாறாக பக்கமாய் திரும்பி போய்விட்டார்கள். இவர்கள் தங்கள் பாரம்பரிய கொள்ளையினால் தேவாலயத்திலும், சமுதாயத்திலும் தங்களை பெரியவர்களாக்கி காண்பிக்கிறார்களே தவிர தங்கள் வாழ்க்கையில் எதையும் செயல்படுத்தினவர்களாக காணப்படவில்லை. ஆனால், சமாரியனோ காயப்பட்டவனின் அருகில் சென்றபடியினால்தான் அவன் நிலமையையும், அவன் தேவைகளையும் காணக்கூடியதாக இருந்தது.

- குற்றுயிராகக் கிடந்த மனுஷனுக்கு சமாரியன் உதவி செய்த நோக்கம் என்ன? எப்படியான உதவிகளை செய்ததை நாம் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது? **(vs.33-35)**

இந்த இடத்தில் குற்றுயிர் என்று பார்க்கும் போது (allmost dead)
சமாரியன் காயப்பட்டவனை காணும்போது, அவன் மனதுருகி கிட்டவந்து அவனுடைய காயங்களில் எண்ணெயும், திராட்சைரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான். இந்தக்காரியத்தை செய்வதற்கு சமாரியன் நியாயப்பிரமாண கட்டளைகளையோ, நீ இப்படித்தான் செய்ய வேண்டும் என்றோ தேவனால் கட்டளை பெற்றவன் அல்ல. இவை எல்லாவற்றையும் இந்த சமாரியன் செய்வதற்கு காரணம், சுயநலமற்றவன் ஆகவும், தன்னைப்போல் பிறனையும் நேசிப்பவனாக இருப்பதே. சுய நலம் இருக்கும்போது எல்லாவற்றையும் பேசமுடியுமே தவிர கிரியையினால் செயல்படுத்த முடியாது. அடுத்ததாக, அந்த சமாரியன் காயப்பட்ட மனுஷனுக்கு உதவி செய்ய வேண்டுமானால், தன்னிடத்தில் உள்ளதை கொடுத்தே ஆகவேண்டும். இதனால் இவன் நிச்சயமாகவே கஸ்டப்படவேண்டியதாக இருக்கும். இந்த இடத்தில் 3 முக்கியமான காரியங்களை சமாரியன் செய்ததை பார்க்கலாம். காயப்பட்ட மனுஷன் யார் என்று வேதம் கூறவில்லை. சிலருடைய கணிப்பு இவன் ஒரு யூதனாக இருக்கலாம்.
**1.Compasion**
**2.Care**

**3.Cost (No limit)** வசனம் 35ல் இரண்டு பணம் (2 silver coins) இது அந்தக்காலத்தில் இரண்டு நாள் சம்பாத்தியம் இப்பணம் சத்திரத்தில் ஒருவனை வைத்து 2 மாதம் பராமரிக்க போதுமானது. தன் சுய வாகனத்தில் ஏற்றிச் செல்ல வேண்டும். பராமரிக்க வேண்டும். தனது பணத்தை செலவழிக்க வேண்டும். தன் சுய வாகனத்தில் ஏற்றிச் செல்லும் போது தான் நடந்துதான் செல்லவேண்டும். அந்தக்காலத்தில் தூரப்பிரயாணம் செய்பவர்கள் தங்களுக்கென்று Medicine kit எடுத்துச் செல்வார்கள். அதில் திராட்சைரசமும், எண்ணையும் முக்கியமாக இருக்கும்.

- இந்த இரண்டு வசனத்தினூடாகவும் **(vs.36-37)** இது வரை நாம் படித்த பாடத்தினூடாகவும் எதைக் கற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது?

நியாயசாஸ்திரி தன்னை நீதிமானாக காண்பிக்கும் பொருட்டு, “எனக்கு பிறன் யார்?” என்று இயேசுவிடம் கேட்டதற்கு, இயேசு கிறிஸ்து யார் பிறன் என்றும் அவனே நீதிமான் என்றும், இந்த நியாயசாஸ்திரிக்கு காண்பித்தார். காண்பித்து விட்டு 37 “நீயும் போய் அந்தப்படியே செய்” என்றார். இதனுடைய அர்த்தத்தைப் பார்க்கும் போது நீயும் அப்படியே செய்யும் போது நீதிமானாகவும், மற்றவர்களுக்கு இரக்கம் செய்கிறவனாகவும் உன்னைக் காண்பிக்க முடியும்.

இன்றய உலகில், ஒரு சமுதாயமாக இருந்தாலும் சரி, அல்லது சபையானாலும் சரி ஆவிக்குரிய மற்றும் சரீர தேவை நிறைந்தவர்கள் ஏராளம். எப்படி தேவைகளை சந்திக்க முடியும்?

---

Three Attitudes displayed:

- Robbers: What’s yours is mine and I’m going to take it.
- Priest/Levite: What’s mine is mine and I’m going to keep it.
- Samaritan: What’s mine is yours and I’m going to share it.